**தலைப்பு 250- அரச கணக்குகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 08 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 08 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான கருத்துரைகள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் இரண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கங்கள் அக் காலப்பகுதிற்குள் செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. | Covid – 19 தொற்று நிலைமை காரணமாக அலுவலக நடவடிக்கைகள் முடங்கப்பட்டமையினால், பராமரிப்பு மற்றும் சொத்துக்கள் புனரமைப்பு நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்படுவதற்கு முடியவில்லை. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மேலதிக ஒதுக்கங்களை ஏற்படுத்துதல் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீண்டெழும் செலவு விடயங்கள் 03 மற்றும் மூலதன செலவு விடயங்கள் 02 இற்காக மேலதிக ஒதுக்கங்களை ஏற்படுத்தியமையால் வருடத்திற்குள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 14,905,977 ஆன மிகுதியொன்று காணப்பட்டதுடன் அது தேறிய ஒதுக்கங்களில் நூற்றுக்கு 23 இலிருந்து நூற்றுக்கு 60 வரையான வீச்சிலான சதவீதங்களைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | COVID தொற்று நிலைமை காரணமாக வாகனங்கள் கடமை நடவடிக்கைகளுக்காக கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே ஓட்டங்கள் இல்லாமை, வெளித்தரப்பினருடன் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த சந்திப்புக்கள் இடம் பெறாமை, மற்றும் நிறுவனச் சுற்றாடல் சுத்திகரிப்புப் பணிகளுக்காக வெளித்தரப்பினர் கைவிடப்பட்டமை, | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மேலதிக ஒதுக்கங்களை ஏற்படுத்துதல் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதவியணியினரின் பயிற்சி செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பணிகளை நிறைவு செய்தலானது திணைக்களத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமை போன்றவற்றால் திட்டமிட்டவாறு செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச நிதிச் சுற்றறிக்கையின் 02/2020 ஆம் இலக்கத்தில் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 6 இன் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்று (ACA – C மாதிரிப்படிவம்) அண்ணளவான அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று அவ்வாறு தயாரிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | | |
| (அ) வருடத்திற்குள் முற்பணங்கள் அறவிடப்பட்டமை ரூபா 6,084,175 என்பதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 2,988,659 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 3,095,516 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படுவதில் சிக்கலொன்று காணப்பட்ட போதிலும், அது இறுதி விளைவிற்கு தாக்கமளிக்கவில்லை. மேலும், எதிர்காலத்தில் குறித்த சுற்றறிக்கை திருத்தப்பட்டு முறையான வகையில் அனைத்து அரச நிறுவனங்களின் இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு | சரியான, உறுதியான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டிகள் வெளியிடப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 5,428,048 என்பதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 3,482,304 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,945,744 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**2.3 அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2013 திசெம்பர் 04 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிச் செல்வதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்த ஆராய்ச்சி உதவியாளர் பதவியை வகித்த உத்தியோகத்தரிடமிருந்து அன்றைய தினத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மிகுதி ரூபா 132,846 என்பதுடன் அத்தினத்திலிருந்து சேவையை விட்டுச் சென்று 07 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இம் மிகுதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | இம் மிகுதியான ரூபா 132,846 ஐ அறவிடுதல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் **309/2018/DMR** இன் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்காக அல்லது தீர்ப்பதற்காகப் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2008 திசெம்பர் 17 ஆந் திகதி மரணித்த அரச முகாமைத்துவ பதவியிலான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை ரூபா 164,953 என்பதுடன மரணித்து 12 வருடங்கள் கடந்து விட்டபோதிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகை பெறப்படும் சந்தர்ப்பத்தில் ஆதனக் கடன் பத்திரக் காப்பீட்டாளராக இருந்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமொன்று பின்னர் அக் கடன் பத்திரக் காப்பீட்டாளராக இருந்த தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற நிறுவனம் இரண்டும் பொறுப்புக்களை | நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்காக அல்லது தீர்ப்பதற்காகப் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நிராகரித்தமையால் மரணித்த உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுதல் சிக்கலாக இருந்தது. |

## 2.4 வணிகமல்லாத முற்பணக் கணக்கு

### 2.4.1 நானாவித முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 சனவரி 01 ஆந் திகதியில் ரூபா 160,584,098 ஆன நானாவித முற்பணக் கணக்கில் நிலுவை மிகுதி மீளாய்வாண்டு இறுதி வரையில் ரூபா 160,106,800 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் இந்த நிலுவை மிகுதியில் ரூபா 477,299 அதாவது நூற்றுக்கு 0.30 வீதம் மட்டுமே வருடத்திற்குள் அறவிடப்பட்டிருந்தது. | 2020 வருடத்திற்குள் குறிப்பிட்ட நிலுவை மிகுதிகள் அறவிடப்பட்டமை ரூபா 477,298.72 என்பதாகவும் அந் நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 0.30 வீதமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை சரியாகும். | பின் தொடரல் நடவடிக்கை முறையாகச் செய்யப்பட்டு நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு போதுமானளவு எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நானாவித முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் மாவட்டச் செயலகங்கள், அமைச்சுக்கள், மற்றும் திணைக்களங்கள் 10 இற்கான மொத்த நிலுவை முற்பண மிகுதி ரூபா 160,106,800 என்பதுடன் அவற்றுள் மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் 09 இற்கான நிலுவை மிகுதி ரூபா 153,785,015 ஆனது 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பொதுத் திறைசேரியினால் நேரடியாக மாவட்டச் செயலாளருக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது மாவட்டச் செயலகத்தினால் ஏனைய நிறுவனங்களுக்கு உப முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>அரச கணக்குகள் திணைக்களம் ஒரு இடைத்தரகராக மட்டுமே செயற்பட்டிருந்ததுடன், இம் முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது, சட்டரீதியான செயற்பாடுகள் முடிவடையாமை, முற்பணம் அறவிடப்படுவதற்காகத் தேவையான கோவைகள் இடமாற்றம் செய்யப்பட்டமை அல்லது அழிக்கப்பட்டமை, சில | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | நிறுவனங்கள் தற்போது செயலிழந்து காணப்பட்டமை, பொருளாதார சிக்கல்களில் இயங்கி வருதல் போன்ற காரணங்களினால் நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு முடியாமை போன்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதற்கு ஏற்பட்டிருந்தமையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். | |
| (இ) 2004/2005 வருடங்களில் நெல் கொள்வனவிற்காக மாத்தளை மாவட்டச் செயலகத்தினால் லக்கல பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகையில் மிகுதி ரூபா 2,183,000 ஆன நிலுவை 2020 ஒக்டோபர் மாதத்திலிருந்து ரூபா 10,000 ஆன மாதாந்தத் தவணைகளில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அறவீடுகள் மீளப் பெற்றால் மேற்படி நிலுவையை அறவிடுவதற்கு சுமார் 18 வருடங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், 2020 வருடத்தில் அதில் ரூபா 75,000 அதாவது நூற்றுக்கு 9 வீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | லக்கல பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இற்றை வரையில் பொருளாதார சிக்கல்கள் அடிப்படையில் இயங்கி வருவதாக அச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தாக மாத்தளை மாவட்டச் செயலாளரினால் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அத்துடன் , லக்கல பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் சங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஏற்பட்ட ரூபா 1,464,642.00 ஐ நட்டங்களாக பதிவழிப்பதற்காக நி.பி 109 விண்ணப்பம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2006 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட நெல் கொள்வனவிற்கான முற்பணங்களில் 2014 ஆம் வருடத்தில் காணப்பட்ட நிலுவை மிகுதியின் ரூபா 12,560,031 இல் 2020 | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்ட கமநல அபிவிருத்தி மாவட்டச் செயலகங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டதாகவும் அந் நிறுவனத்திடமிருந்து பணம் அறவிடப்படாத காரணத்தினால் பல நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 வரையில் ரூபா 1,793,880 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இன்னும் நிலுவை ரூபா 10,766,155 மிகுதியாக இருப்பதுடன் மீளாய்வாண்டில் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை | தொடரப்பட்டுள்ளதாகவும் அவ்வழக்குகள் முடியும் வரையில் பணம் அறவிடப்பட முடியாதென்றும் எமக்கு தெரிவித்துள்ளனர். | |
| (உ) குருணாகல் மாவட்டச் செயலகத்திற்கு உரிய 2008 ஆம் வருடத்திற்கு முன்பிருந்து காணப்பட்டு வரும் ரூபா 349,475 ஆன கடன் நிலுவையை அறவிடுவதற்கு திணைக்களம் இற்றை வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. | ரூபா 349,477.50 ஆன பணம் தீர்க்கப்படுவதாக உரிய நிறுவனம் அறிவித்துள்ளது. | - மேற்படி - |
| (ஊ) சுகாதார, போசனை மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் கீழ் வருகின்ற அனுராதபுரம் போதன வைத்தியசாலையின் காப்பறையிலிருந்து 2019 மார்ச் 02 ஆந் திகதி ரூபா 6,321,785 ஆன தொகையொன்று திருட்டு போயிருந்ததுடன் இறுதி வரையில் இது தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்படாமையினால் இன்னும் முழுத்தொகையும் நிலுவை மிகுதியாகக் காணப்பட்டது. | அதற்கான முறையான சோதனையொன்று விரைவில் மேற்கொள்ளப்பட்டு பொறுபபானவரிடமிருந்து குறிப்பிட்ட பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் விசாரணை செயற்பாடுகளின் பின்னர் இது தொடர்பாக முழு அறிக்கையொன்று இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் வருடத்திற்கான அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 38,097,815 இல் 2020 திசெம்பர் 31 வரையில் நிலுவை மிகுதி ரூபா 34,033,061 என்பதுடன் 2020 வருட இறுதி | அனுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்கு அனுராதபுர கமநல அபிவிருத்தி மாவட்டச் செயலகம் மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் தீர்க்கப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூபா 12,971,207 மற்றும் ரூபா 21,062,654 ஆகும். சட்டரீதியான நடவடிக்கைகள் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வரையில் அறவிடப்பட்டமை ரூபா 4,063,954 அதாவது நூற்றுக்கு 11 வீதமாகும். இதன் பிரகாரம் நிலுவைத்தொகையை அறவிடும் செயற்பாடுகள் மந்தகதியில் இருப்பதாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டிருந்ததுடன் கமநல அபிவிருத்தி மத்திய நிலையங்களின் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலுவைத் தொகைகள் குறிப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்கள் வழங்கப்பட்ட பின்னரே அறவிடப்பட முடியும். | - |
| (ஏ) | பொலனறுவை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவை மிகுதி ரூபா 55,927,666 என்பதுடன் அது மீளாய்வாண்டின் முழு நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 35 வீதமாக உயர்ந்த சதவீதத்தில் காணப்பட்டது. அதில் 2018 ஆம் வருடத்தில் நெல் விற்பனைச் சபையின் குருப்பு சந்தியில் அரிசி ஆலைகளை நடாத்திச் செல்வதற்காக ரூபா 769,428 மற்றும் உணவு ஆணையாளரிற்கு அரிசி விநியோகிப்பதற்காக ரூபா 13,018,114 ஆன நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 109 மற்றும் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையில் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பொலன்னறுவை மாவட்டச் செயலகங்களினால் நெல் விற்பனைச் சபையின் நெல் ஆலையில் காணப்பட்ட நட்டமான ரூபா 769,428 ஆன தொகை புத்தகங்களில் நீக்கப்படுவதற்காக விண்ணப்பம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உணவு ஆணையாளருக்கு அரிசி விநியோகிக்கும் போது ஏற்பட்ட ரூபா 13,018,114 ஆன நட்டத்தை பதிவளிப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகவல்கள் உள்ளடக்கிய அறிக்கையொன்று பொலநறுவை மாவட்டச் செயலகத்திடம் எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஐ) | கொழும்பு பொது வைத்தியசாலையின் பல் சிகிச்சைப் பிரிவில் 2002 சனவரி 22 ஆந் திகதி ஏற்பட்டிருந்த சம்பள மோசடியுடன் தொடர்பான | கொழும்பு பற் சிகிச்சைப் பிரிவின் ஏற்பட்ட சம்பள மோசடிகள் மாளிகாகந்த நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம் பீ/67/02 இன் கீழ் வழக்கொன்றுக்கான விசாரனைகள் இடம் பெற்று | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் பொது வைத்தியசாலை- - கொழும்பிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,408,460 ஆன முற்பண மிகுதி 2020 திசெம்பர் 31 வரையில் அறவிடப்படுவதற்கு அல்லது நட்டமாக புத்தகங்களிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருவதுடன் ஒழுக்காற்று உத்தரவின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டதில் 5% ஆன தொகை அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டுள்ளதால் அத்தொகை மீண்டும் பெற்று இம் முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஒ) | திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் 2016 ஆம் வருடத்திலிருந்து நடாத்தப்படுகின்ற ரூபா 1,652,917 ஆன நிலுவை மிகுதி தீர்க்கப்படுவதற்கு சதொச நிறுவனத்திற்கு நிதி இயலுமை இல்லாமை குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட மிகுதி பதிவளிக்கப்படுவதற்காக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | சதொச நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகைக்கான தேவையான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். | - மேற்படி - |
| (ஒ) | அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் நிலுவை மிகுதி ரூபா 45,499,095 என்பதுடன் அது மொத்த நிலுவைத் தொகையில் நூற்றுக்கு 28 வீதம் ஆகும். இந் நிலுவை மிகுதியை அறவிடுவதற்கு திணைக்களம் இற்றை வரையில் தவறியிருந்தது. | செலுத்த தவறிய கமநல அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் வழக்குச் செயற்பாடுகள் மூலம் குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்காக எதிர்பார்க்கப்படுவதாகவும் தயவுடன் தெரிவிக்கின்றேன்.<br><br>உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பின் தொடரல்களை மேற்கொள்வதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | சதொச நிறுவனத்திடம் அறவிட வேண்டிய பணம் பதிவளிக்கப்படுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான ஒதுக்கங்கள் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. | - |
| (ஔ) கண்டி மாவட்டச் செயலகத்தின் 2020 சனவரி 01 இல் காணப்பட்ட நிலுவை மிகுதி ரூபா 1,441,687 இல் 2020 திசெம்பர் 31 வரையில் ரூபா 390,000 அதாவது நூற்றுக்கு 27 வீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | கண்டி மாவட்டச் செயலகத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகை மாதாந்தம் ரூபா 30,000 வீதம் தீர்க்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தமை ஏனெனில் குறிப்பிட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொருளாதார நெருக்கடியில் இயங்கி கொண்டிருந்த காரணமாகும். ஆனால் இம் மாதாந்த தவணையை கணிசமான தொகையால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 2.4.2 ஏனைய அரசுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2021 பெப்ரவரி 23 ஆந் திகதிய பதில் கடிதம் மூலம் பிரித்தானிய அரசிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,242,947 உம் மலேசியா அரசிற்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 67,928 உம் ஆன மொத்தப்பெறுமதி ரூபா 1,310,875 ஓய்வூதியச் சம்பளத்தொகை 2021 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையில் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்திற்கான ரூபா 61,744 ஆன தொகையை மீளச் செலுத்துவதற்காக மலேசியாவில் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக ஈ மெயில் செய்தியொன்றின் மூலம் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீள் நிரப்பலை விரைவுபடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு அளவைப் பெற்றுக் கொள்ள முடியாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 ஆம் வருடத்திற்கான திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகள் ஆரம்பித்தல், கணக்கிலெடுத்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் மூடுதல் என்பன திணைக்களத்தின் பிரதான பணிகளாகும். | | |
| (i) பொது வைப்புக் கணக்குகளில் மாவட்டச் செயலக (6003) வைப்புக் கணக்குகள் 04 இற்கு மற்றும் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் (6000) வைப்புக் கணக்கிற்கான கூட்டுத்தொகை ரூபா 10,943,683 ஆன வரவு மிகுதியாகக் காணப்பட்டது. | இம் மிகுதிகளைப் பதிவளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) இலக்கம் 243/2015 மற்றும் யூன் 24 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கைப் பிரகாரம், 6003 தொகுதியின் வைப்புக் கணக்குகளைப் பூச்சியமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் வருடத்திலிருந்து அந் நடவடிக்கை வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இலக்கம் 6003 இன் கீழ் 2 வைப்புக் கணக்குகளில் பல வருடங்களாக காணப்பட்டு வருகின்ற ரூபா 10.003 மில்லியன் மொத்த மிகுதியொன்று தீர்க்கப்படாது இன்னும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | கொழும்பு மாவட்டச் செயலகத்தின் வரவு மிகுதி தீர்க்கப்படுவது தொடர்பாக உள்நாட்டு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை 2019.05.17 ஆந் திகதி பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதுடன் அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் இவ்வரவு மிகுதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>மேலும் பொது வைப்புக் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | கணக்கில் 2008 ஆம் வருடத்திலிருந்து திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரவு மிகுதி கணக்கிடப்பட்டமை தொடர்பாக கண்டு பிடிக்கப்பட்டு எதிர்காலத்தில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அத் திணைக்களத்திற்கு குறிப்பிட்டு அனுப்பட்டுள்ளது.<br><br>கணக்குகள் 02 இற்கான வரவு மிகுதியான ரூபா 2,970 மற்றும் ரூபா 11,700 ஆன தொகை நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டு வருவதுடன் அம் மிகுதிக்கு உரிய நிறுவனம் அல்லது தலைப்பு இலக்கம் கண்டுபிடிப்பதற்கு முடியாதிருந்தால் 2021 ஆம் வருடத்தில் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு புத்தகங்களிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) அத்துடன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்படுத்துவதற்காக ஆலோசனைகளை வழங்குதல், இதன் கீழான இன்னுமொரு வெளியீடாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் மாதிரி அடிப்படையில செய்யப்பட்ட 46 நிறுவனங்களில் காணப்பட்ட 125 வைப்புக் கணக்குகளின் மிகுதி 02 வருடத்திலிருந்து 05 | அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களினால் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பட்டிருந்த வருடாந்த இணக்கக் கூற்று மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மிகுதிகள் தொடர்பாக நி.பி 570 இன் பிரகாரம் பகுப்பாய்வொன்று | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,854,732,825 ஆகும். | மேற்கொள்ளப்பட்டு அதற்கு இணங்காத வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 2020.12.31 இல் வைப்புக்கள் கணக்கு தொடர்பான வருடாந்த இணக்க அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட மிகுதிகள் தொடர்பான பின்தொடரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | |
| | (iv) மேற்படி பொது வைப்புக் கணக்குகளின் தேறிய மிகுதியில் காணப்பட்ட 108 வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,937,815,718 ஆன ஆரம்ப மிகுதி 2020 ஆம் வருட இறுதி வரையில் அவ்வாறே காணப்பட்டது. | இத் திணைக்களத்தினால் பல வருடங்களாக செயற்படாமல் காணப்பட்ட மிகுதிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஏனைய மிகுதிகள் தொடர்பான பின் தொடரல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| (ஆ) | 2020 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முற்பண "பீ" கணக்குகளை மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக இருந்ததுடன் அதனூடாக எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளாக இணங்காணப்பட்டிருந்தமை, செயற்திறனான கொடுப்பனவுகள் மற்றும் அறவிடுதல் முறைமையொன்றை | 2020 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உரிய முற்பண "பீ" கணக்குகளின் மேற்பார்வை தொடர்பாக திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படுவதற்கு கூட்டங்களைக் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்படுத்துவதாகும். எனினும், மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கட்டதன் பிரகாரம் 102 நிறுவனங்களுக்கு உரித்தான. பல வருடங்களாக காணப்பட்டு வருகின்ற முற்பண ‘‘பீ’’ கணக்குகளில் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற மரணித்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட, வேலையிலிருந்து விலகிச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற அதிகாரிகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 841,163,699 ஆன அறவிடப்படாத மிகுதிகள் காணப்பட்டன. அதற்கான திணைக்களங்களினால் இலக்கம் 262/2017 மற்றும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஓய்வூதியம் பெற்றுச் சென்ற மற்றும் மரணித்த அதிகாரிகளின் அறவிட வேண்டிய கடன் மிகுதியைத் தீர்ப்பதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டதே தவிர அந் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டதாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | கூட்டியுள்ளதுடன் நிலுவை கடன் மிகுதிகளை அறவிடுதல் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2020.12.31 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கு இற்றை வரையில் 10 நிறுவனங்கள் தவிர ஏனைய அனைத்து நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அந் நிறுவனங்களின் அறிக்கைகள் இற்றை வரையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தற்போதுள்ள சூழ் நிலையில் கூட்டங்களை கூட்ட முடியாதென்பதால் நிறுவனங்களுக்கு வெவ்வேறான கடிதங்கள் அனுப்பப்பட்டு அதன் பிரகாரம் அறவிடுவதில் பிரச்சினைகள் காணப்பட்டால் அதற்காகத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு திட்டமிப்பட்டுள்ளது. | |
| (இ) | (i) | 2020 ஆம் வருடத்தில் அரச நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் கீழான அரசின் திணைக்களங்களுக்கு முற்பணக் கணக்கின் கீழ் ரூபா 15,783,074,603 ஆன தேறிய மிகுதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் அதில் மொத்தம் ரூபா 16,081,884,989 ஆன வரவு மிகுதிகள் | அரச அமைச்சுக்களில் முற்பணக் கணக்குகளுக்கான ஒதுக்கங்களின் எல்லைகளை தீர்மானிப்பது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலமே ஆகும். குறிப்பிட்ட ஒதுக்கீட்டுச் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்கியுள்ளது. அத்துடன் அம் மிகுதியில் பல வருடங்களாகத் தீர்க்கப்படாது காணப்படுகின்ற மொத்தம் ரூபா 1,353,073,051 ஆன தேறிய மிகுதி உள்ளடங்கியிருந்தது. | சட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற கணக்கு இலக்கம் திறக்கப்படுதல் மாத்திரமே அரச கணக்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ii) | அத்தேறிய மிகுதியில் 06 கணக்குகளுக்கான தீர்க்கப்படாது காணப்படும் மொத்தம் ரூபா 19,940,017 ஆன செலவு மிகுதி பல வருடங்களாகக் காணப்பட்டு வருகின்றது. | காட்டப்பட்டுள்ள மிகுதிகள் தொடர்பாக நிறுவனத்தினால் பின்தொடரல்கள் மேற்கொள்ளப்பட்டு நி.பி 518 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மூடுவதற்கு தேவையான படி முறைகள் எடுக்குமாறு ஆலோசனை வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கின்றேன். | - மேற்படி - |
| (ஈ) | 2018 ஆம் வருடத்தில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், எதிர்வரும் 10 வருடங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்காக முன்மொழிவுகள் நிறைவேற்றப்பட்டு இருந்ததுடன் அதற்காக 2018 ஒக்டோபர் 02 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உரிய சமர்ப்பிக்கப்பட்ட பாதை வரைபடத்தில் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்கான காலக்கெடு முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2020 ஆம் வருடத்திலும், திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் 2022 ஆம் வருடத்தில் | அரச சொத்துக்களை இனங்காணுதல், அறவிடுதல் மற்றும் வெளிப்படுத்தலுக்குரிய போதுமானளவு கொள்கையொன்று | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அரச சொத்துக்களை இனங்காணுதல், அளவிடுவதற்காக மற்றும் வெளிப்படுத்தலுக்கான பணிகள் 2022 ஆம் வருடம் இறுதிக்குள் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதன் கீழ் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்ட 214 மத்திய அரச நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும் அவற்றில் 60 காணி மற்றும் கட்டிடங்கள் இல்லையெனவும் அவற்றில் முழுமையாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் எடுக்கப்பட்டமை இறுதி 10 நிறுவனங்கள் மட்டுமே எனவும் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்ட நிறுவனங்களின் சொத்துக்களின் சதவீதம் நூற்றுக்கு 07 வீதம் மட்டுமே ஆகும். | காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2019 ஆம் வருட இறுதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் மதிப்பு ரூபா 1,355 பில்லியன் என்பதுடன் 2020 ஆம் வருடத்தில் அதன் மதிப்பு ரூபா 1,776 பில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையை எதிர் கொண்ட போதிலும் ரூபா 421 பில்லியன் சொத்துக்களை கணக்கிட முடிந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் இப்பணி 2022 ஆம் வருட இறுதியில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ii) | ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் இனங்காணப்படல், அளவிடுதல் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான பணிகள் திருத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 2022 ஆம் வருடம் வரையில் தாமதமாக்கப்பட்டிருந்ததுடன் அதன் கீழ் ஆரம்பப்பணிகள் மட்டுமே இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | பாதை வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள பொறுப்புக்கள் இனங்காணப்படல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் வருடத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக அப்பணி முடிக்கப்படுவதற்கு 2022 வரை நீடிப்பதற்கு ஏற்பட்டது. அத்துடன், அப்பாதை வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள செலுத்த வேண்டிய விடயங்கள் இனங்காணப்படும் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | பணிகள் இற்றை வரையீல் ஆரம்பிக்கப்படாமையுடன் அப்பணிகள் 2021 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (iii) ஆரம்ப பாதை வரைபடத்தின் பிரகாரம் 2021 ஆம் வருடத்தில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த வருமானம் மற்றும் செலவுகளை இனங்காணல், அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் பணிகள் திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் மூலம் 2026 ஆம் வருடத்திற்குப் பின்னர் தாமதமாக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட பாதை வரைபடத்தின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானம் மற்றும் செலவுகளை இனங்காணல், அளவீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் 2026 ஆம் வருடத்திற்குப் பின்னர் முழுமையாக அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்குகளை வைத்திருத்தபகதற்கும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (iv) மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தின் படி ஒவ்வொரு வருடமும் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்னர் உரிய செயற்பாடுகளுக்கான முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இற்றை வரையில் ஒரு முன்னேற்றம் கூட அறிக்கையிடப்படவில்லை. | இற்றை வரை உரிய செயற்பாடுகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன் இந்த வருட இறுதியில் உள்ளபடி முன்னேற்றம் அறிக்கையிடப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| (உ) 2019 ஆம் வருடத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்ற தூதரலாயத்தினால் வழங்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2020 இன் பிரகாரம் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற அரச நிதித் தகவல்கள் அரசநிதிப் புள்ளிவிபரவியல் (Government Finance Staistics) மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூரட்சி நிறுவனங்களில் 2015 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரை 4 வருடங்களுக்கு | சர்வதேச நாணய நிதியம் வழங்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் 2020 ஆம் வருடத்திற்காக மட்டுமே மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன் 2020 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய நடவடிக்கை ஆரம்பிப்பது நடைமுறையில் சாத்தியமற்றது. | - மேற்படி - |

அரச துறைகளுக்குச் சொந்தமான அனைத்து வணிக நிறுவனங்களிலும் நிதித் தகவல்களை சேகரித்தல் மற்றும் ஒன்றினைப்பதற்கான திட்டம் செயற்படுத்தப்படுதல் 2020 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளூாட்சி நிறுவனங்களில் அந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி மாற்றங்கள் தொடர்பாக இந் நடவடிக்கைகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.